# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நிகழ்ச்சி நிரல்

**2026, செப்டம்பர் 3, வியாழக்கிழமை**

**ஆவணி 17, திருவள்ளுவர் ஆண்டு – 2057**

**காலை 9.30 மணி**

### 1. வினாக்கள் – விடைகள்

### 2. அரசினர் சட்டமுன்வடிவு
(அறிமுகம் செய்தல்)

**2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய், முதலமைச்சர்** அவர்கள் 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்.

பிறகு, அச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வார்.

### 3. அரசினர் தனித் தீர்மானம்

மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய், முதலமைச்சர்** அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:–

"இந்திய அரசியலமைப்புச் சட்டம், கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்தி, இந்தியாவின் பன்மொழி மற்றும் பன்முகப் பண்பாட்டுத் தன்மையை அங்கீகரித்து, மாநிலங்களுக்கு தங்களது அதிகாரப்பூர்வ மொழியைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு சட்ட வாய்ப்புகளை வழங்கியுள்ளது. தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டம், 1956–ன் பிரிவு 2–ன் படி, தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக தமிழ் அறிவிக்கப்பட்டுள்ளது;

தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தின் பிரிவு 4–A மற்றும் 4–B ஆகியவற்றின் கீழ், உயர்நீதிமன்றத்தின் கீழ் செயல்படும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், வாடகை மற்றும் வருவாய் நீதிமன்றங்களில் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கும், தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் உத்தரவுகளை தமிழில் வெளியிடுவதற்கும் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 348(2), ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழியை உயர்நீதிமன்ற நடவடிக்கையில் பயன்படுத்துவதற்கு, அம்மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலுடன் அதிகாரம் வழங்குவதற்கான அரசியலமைப்புச் சட்ட வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது;

மேலும், ஆட்சி மொழிகள் சட்டம், 1963–ன் பிரிவு 7, ஆங்கிலத்துடன் கூடுதலாக மாநிலத்தின் ஆட்சி மொழியை ஒரு மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலுடன் உயர்நீதிமன்றத் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் உத்தரவுகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கும் சட்ட வாய்ப்பை வழங்கியுள்ளது;

பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இலக்கண, இலக்கிய வளங்களுடன் இன்றளவும் உயிர்ப்புடன் பேசப்பட்டு வரும் உலகின் தொன்மையான தமிழ் மொழி, உலகம் முழுவதும் சுமார் 9 கோடி மக்களாலும், இந்திய அளவில் சுமார் 8 கோடி மக்களாலும் பேசப்பட்டு வருகிறது. மேலும், தமிழின் தொன்மை, தொடர்ச்சியான இலக்கிய மரபு, கல்வெட்டு மற்றும் வரலாற்றுச் சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில், ஒன்றிய அரசால் 2004–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12–ஆம் தேதி அன்று தமிழ் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது;

தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்கெனவே 6.12.2006 அன்று மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தமிழைப் பயன்படுத்துவதற்கான தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியது. இதுகுறித்து ஒன்றிய அரசின் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கடந்த 2.2.2018 அன்று மாநிலங்களவையில், தமிழ்நாட்டின் முன்மொழிவு இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது என்றும், கடந்த 16.10.2012 அன்றைய கடிதத்தின்படி உச்சநீதிமன்றத்தின் முழு அமர்வு, இந்த முன்மொழிவை ஏற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்;

தற்போது சட்டத் தமிழ், மொழிபெயர்ப்பு, டிஜிட்டல் நீதிமன்றங்கள், தொழில்நுட்ப அடிப்படையிலான மொழிபெயர்ப்பு மற்றும் சட்டத் தரவுத்தளங்கள் ஆகியவை பெரிதும் முன்னேறியுள்ள நிலையில், மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் ஒரே நேரத்தில் தமிழில் பேசுவதை, ஆங்கிலத்தில் கேட்கமுடியும் வகையில் தொழில்நுட்பம் முன்னேறியுள்ள தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப மறுபரிசீலனை செய்வது அவசியமாகிறது என்று இந்தப் பேரவை கருதுகிறது;

எனவே, தமிழை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முதன்மையான நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வேண்டும்; தமிழில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள், ஆவணங்கள் மற்றும் வாதங்களுக்கு உரிய நடைமுறையை உருவாக்க வேண்டும்; உயர்நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தும் தமிழில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்; மாண்புமிகு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களுக்கான

சட்டத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு பயிற்சியை ஏற்படுத்த வேண்டும்; அரசியலமைப்புச் சட்ட Article 348(2) மற்றும் ஆட்சி மொழிகள் சட்டம், 1963, பிரிவு 7 ஆகியவற்றின் கீழ் மாநில ஆளுநர் அவர்களால் அனுப்பப்படும் முன்மொழிவுகளின் மீது தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."

## 4. 2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்

(*) 2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

### கோரிக்கை எண் 22

**காவல்**
**(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய், முதலமைச்சர்** அவர்கள் கீழ்க்காணுமாறு கோருவார்:–

"காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கை எண் 22–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,955,75,07,000/–, மூலதனக் கணக்கில் ரூ.566,58,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.23,50,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

### கோரிக்கை எண் 23

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**
**(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய், முதலமைச்சர்** அவர்கள் கீழ்க்காணுமாறு கோருவார்:–

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கை எண் 23–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.587,50,53,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.87,01,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

## அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

& 74. 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6–2) துறையின் 24.7.2026–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 43–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

& 75. 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆனந்த் திருமணப் பதிவு விதிகளை இயற்றியது குறித்து உள் (நீதிமன்றங்கள்–VIA) துறையின் 23.1.2026–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 32–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1909–ஆம் ஆண்டு ஆனந்த் திருமணச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 7/1909) 6(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

@ 114. மானியக் கோரிக்கை எண் 22 – காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2026–2027. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

@ 115. மானியக் கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2026–2027. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

% 116. பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2026–2027. (தமிழ்)

% 117. மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2026–2027. (தமிழ்)

% 118. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2026–2027. (தமிழ்)

**இரா. சாந்தி,**
**செயலாளர்.**

(*) வெட்டுத் தீர்மானங்கள் 2.9.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

@ 2.9.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

% 2.9.2026 அன்று பேரவையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றன.

& 3.9.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும்.

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

## LIST OF BUSINESS

**THURSDAY, THE 3RD SEPTEMBER, 2026**

**AAVANI 17, THIRUVALLUVAR AANDU - 2057**

**AT 9.30 A.M.**

## I. QUESTIONS AND ANSWERS

## II. GOVERNMENT BILL

(Introduction)

**The Tamil Nadu Fire and Rescue Services (Amendment) Bill, 2026**

Hon. **Thiru. C. Joseph Vijay, Chief Minister,** will move for leave to introduce the Tamil Nadu Fire and Rescue Services (Amendment) Bill, 2026.

Also to introduce the Bill.

## III. GOVERNMENT RESOLUTION

Hon. **Thiru. C. Joseph Vijay, Chief Minister,** will move :-

"The Constitution of India, while upholding the federal principle and recognising the multilingual and multicultural character of India, provides various legal avenues for the States to use their respective official languages. Under Section 2 of the Tamil Nadu Official Language Act, 1956, Tamil has been declared as the official language of the State of Tamil Nadu.

Sections 4-A and 4-B of the Tamil Nadu Official Language Act, legal recognition has been provided for recording evidence in Tamil and for issuing judgments, decrees and orders in Tamil in the civil and criminal courts, tribunals, rent courts and revenue courts functioning under the High Court.

Article 348(2) of the Constitution of India provides a constitutional mechanism whereby the Governor of a State, with the previous consent of the President of India, may authorise the use of the official language of the State in the proceedings of the High Court.

Further, Section 7 of the Official Languages Act, 1963, provides for the use of the official language of a State, in addition to English, in judgments, decrees and orders of the High Court, subject to the authorisation of the Governor of the State with the previous consent of the President of India.

Tamil, one of the world's ancient languages, possessing a grammatical and literary heritage spanning several millennia and continuing to be spoken as a living language even today, is spoken by approximately 9 crore people worldwide and about 8 crore people in India, In recognition of its antiquity, continuous literary tradition, inscriptions and historical evidence, Tamil was recognised as a Classical Language by the Union Government on 12th October, 2004.

The Tamil Nadu Legislative Assembly had already unanimously passed a resolution on 6.12.2006 seeking the use of Tamil in the High Court of Madras and forwarded the same to the Union Government. In this regard, the Hon'ble Union Law Minister stated in the Rajya Sabha on 2.2.2018 that the proposal of Tamil Nadu had been referred for the views of the Hon'ble Chief Justice of India and that, as per the letter dated 16.10.2012, the Full Court of the Supreme Court of India had not agreed to the proposal.

At present, significant advancements have been made in legal Tamil, translation, e-Courts, technology-enabled translation and legal databases. Further, in the present context, where Artificial Intelligence (AI) technologies have advanced to the extent that speech in Tamil can be simultaneously rendered and heard in English, this House feels that this matter need to be reconsidered in keeping with the current technological developments.

Therefore, this House unanimously urges the Union Government to Recognise Tamil as the principal language of the High Court of Madras; Establish appropriate procedures for petitions, documents and arguments filed or presented in Tamil; Create a framework under which all judgments, decrees and judicial orders delivered by the High Court are made available in Tamil; Provide training in legal Tamil and translation for Hon'ble Judges, advocates and court personnel; and Take all necessary legal measures forthwith on the

proposals to be forwarded by the Governor of the State under Article 348(2) of the Constitution of India and Section 7 of the Official Languages Act, 1963. Accordingly, the Tamil Nadu Legislative Assembly unanimously urges the Union Government to take immediate and necessary action to facilitate the use of Tamil as the principal language of the High Court of Madras."

## IV. DEMANDS FOR GRANTS FOR THE YEAR 2026-2027

(*) Discussion and Voting of Demands for Grants for the year 2026-2027.

### Demand No.22

**Police**
(Home, Prohibition and Excise Department)

Hon. **Thiru. C. Joseph Vijay, Chief Minister**, will move:-

"That the Government be granted sums not exceeding Rs.13,955,75,07,000/- under the Revenue account, Rs.566,58,01,000/- under the Capital account and Rs.23,50,01,000/- under the Loan account of Demand No.22 - Police (Home, Prohibition and Excise Department)."

### Demand No.23

**Fire and Rescue Services**
(Home, Prohibition and Excise Department)

Hon. **Thiru. C. Joseph Vijay, Chief Minister**, will move:-

"That the Government be granted sums not exceeding Rs.587,50,53,000/- under the Revenue account and Rs.87,01,17,000/- under the Capital account of Demand No.23 - Fire and Rescue Services (Home, Prohibition and Excise Department)."

## PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. Statutory Rules and Orders

& 74. Notification issued vide G.O.(Ms.) No.43, Home, Prohibition and Excise (VI-2) Department, dated 24th July, 2026 in regard to amendments made to the Tamil Nadu Liquor Retail Vending (in Shops and Bars) Rules, 2003. (Laid on the Table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act 10 of 1937))

& 75. Notification issued vide G.O.(Ms.) No.32, Home (Courts-VIA) Department, dated 23rd January, 2026 in regard to framing of the Tamil Nadu Anand Marriage Registration Rules, 2026. (Laid on the Table of the House under section 6(4) of the Anand Marriage Act, 1909 (Central Act 7 of 1909))

## B. Reports, Notifications and Other Papers

@ 114. Demand No.22 – Policy Note on Police (Home, Prohibition and Excise Department), 2026-2027. (Tamil and English)

@ 115. Demand No.23 – Policy Note on Fire and Rescue Services (Home, Prohibition and Excise Department), 2026-2027. (Tamil and English)

% 116. Announcements made by the Hon. Minister for Milk and Dairy Development on the floor of the House relating to Demand on Dairy Development (Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department), 2026-2027. (Tamil)

% 117. Announcements made by the Hon. Minister for Fisheries – Fishermen Welfare on the floor of the House relating to Demand on Fisheries and Fishermen Welfare (Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department), 2026-2027. (Tamil)

% 118. Announcements made by the Hon. Minister for Animal Husbandary on the floor of the House relating to Demand on Animal Husbandry (Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department), 2026-2027. (Tamil)

**R. SANTHI,**
**SECRETARY.**

(*) Cut Motions sent to the Members on 2.9.2026.

@ Sent to the Members on 2.9.2026.

% Circulated to the Members in the Assembly Chamber on 2.9.2026.

& Will be sent to the Members on 3.9.2026.